வரலாற்றிலிருந்தும் அகற்றப்படுகிருன் திராவிடன்

Phone No 4502

விலை அரை அணு

Regd. No. M. 5458

இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர். C. N. அண்ணதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (28—6—50) வெளியூர் (29—6—50) [இதழ் 290

தமிழ் அழிவது கண்டு தமிழன் வாளாயிருக்கலாமா?

இந்தியா ஒரே நாடென்றால் 'இந்தியயூனியன்' என்றசொல் எதற்கு?

அரசியல் சோர்வு அகன்று விழிப்புணர்ச்சிகொள்ளவேண்டும்

ஆரணி மாநாட்டில் எம். எஸ். இராமசாமி துவக்க உரை

"திராவிடம் என்பதை ஒப்புக்கொண்டால், அதன் வழியிலேயே திராவிட இயக்கக் கொள்கைகள் பரவி விடுமோ என்று அஞ்சுகிருர்கள். அந்த அச்சத்தின் காரணமாகவே, இவர்கள் இத்தனை பெரிய பித்தலாட்டத்தைத் துணிந்து செய்கின்றனர். இதிலிருந்து தமிழர்—திராவிடன் என்கிற பெயர்களே அவன் வாழும் நாடு—அவனுல் ஆளப்படும் ஆட்சி, என்றெல்லாம் சொல்லப்படுகிற இடங்களில் இடம் பெருமல் போய்விடுகிறது. இவ்வாறு திராவிடன் வரலாற்றிலிருந்தும் அகற்றப்படுகிருன்." என்று தோழர் எம். எஸ். இராமசாமி துவக்கவுரையில் குறிப்பிட்டார்.

வட ஆற்காடு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக முதல் மாநாட்டு திறப்பாளர் தோழர் எம். எஸ். இராமசாமி அவர்கள் ஆற்றிய துவக்கவுரை வருமாறு:-

பெரியோர்களே! தாய்மார்களே! திராவிடப் பெருங்குமக்களே!

வடாற்காடு மாவட்ட தி. மு. கழக மாநாட்டைத் திறந்துவைக்கும் பெரும்பேற்றை எனக்களித்ததற்கு உங்களனைவருக்கும் நன்றி செலுத்த நான் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்று நாடெங்கணும் ஒருவித 'அரசியற்சோர்வு' ஏற்பட்டிருப்பதைக் காண்கிறோம். இது ஓர் வருந்தத்தக்க நிலை. ஏன் இத்தகைய சோர்வு ஏற்பட்டிருக்கிறது என்பதை ஆராய வேண்டும்-பரிகாரமும் தேட வேண்டும்.

நான் கூறுகின்ற அரசியல் சோர்வு, கம்மைப் பொறுத்ததல்ல—பொது மக்களுக்குத்தான். அரசியற் சோர்வு என்ருல், அரசியலில் பற்றுக் கொள்ளாத மனநிலை; யார் ஆண்டால் நமக்கென்ன; யார் ஆட்சிக்கு வந்து என்ன செய்துவிடப் போகிருர்? என்பன போன்ற வெறுப்பு நிலைமையைத்தான் 'அரசியற் சோர்வு' என்கிறேன்.

இத்தகைய மனப்பான்மை நாட்டில் நிலவக்கூடாது. நிலவினல் நன்மை தராது. ஆகையினல்தான் இதைப் போக்க வேண்டும்; அகற்றானமுயற்சி எடுக்கவேண்டும் என்கிறேன்.

ஏன் இந்த நிலைமை வந்தது என்ருல், இந்த நாட்டில் முதன் முதலில் அரசியல் கிளர்ச்சி என்று ஆரம்பித்து வைத்த காங்கிரஸ்காரர்கள், மக்களுக்கு அரசியல் விவேகத்தை உண்டாக்கவில்லை. அதற்குமாருக, புராண இதிகாச நம்பிக்கையைப் போல—மத நம்பிக்கையைப் போல—சில தலைவர்களை நம்பிப் பின்பற்ற வேண்டுமென்று போதித்தார்கள். மகாத்மா காந்தியும் ஜவஹருமே வாழ்விக்க வந்த மகான்கள்; எனவே, அவர்கள் சொல்வதைக் கடைப்பிடியுங்கள்—உங்கள் கஷ்டம் தீர்ந்துவிடும், வெள்ளைக்காரன் ஓடிவிடுவான; பாலாறும் தேனாறும் வீதியில் ஓடும் என்று பிரசாரம் செய்தார்கள். இந்தப் பிரசாரத்தைக்கேட்ட மக்கள், அரசியல் அறிவுபெற முடியுமா? முடியாது. மாருக எந்தனயோ வணங்கு பெருகியுள்ள மூடமத நம்பிக்கைகளைப் போலவே அரசியலும் 'சில தனிப்பட்ட தலைவர்களை நம்பித் திரிவது' என்ற அளவில் அமைந்தனர்.

இந்த அளவில் மக்கள் அறிவு இருப்பதனுல்தான், ஜனநாயகம் என்கிற பெயரிலே தலைவர்களின் சர்வாதிகாரம் தலைதூக்கிநிற்கிறது. மக்களின், இந்த அறியாமையை நன்கு உணர்ந்து கொண்ட காரணத்தினுல்தான், காங்கிரஸ்காரர்கள் மானம், வெட்கம் சிறிதுமின்றி பொதுக்கூட்டம் கூட்டி, மக்கள் மன்றத்தில் பேசவந்துவிடுகிருர்கள்! வேறுகள் நாட்டில் இத்தகைய சம்பவம் நடக்க முடியுமா? காங்கிரஸ்காரர்கள் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதி ஒன்றேனும் நிறைவேறவில்லை. மக்களின் கஷ்டங்கள் ஒன்றேனும் விலக்கப்படவில்லை. கஷ்டங்கள் விலகாவிட்டாலும் இருக்கட்டும்—புதிய கஷ்டங்கள் தோன்ருமலாவது இருக்க வேண்டாமா? அதுவும் இல்லை, பழைய கஷ்டங்கள் ஒருபுறம் இருக்க, வரிகள் வளர்ந்துகொண்டே இருக்கின்றன. அரிசியின் அளவு குறைந்துகொண்டே இருக்கிறது. உற்பத்தியை பெருக்குவதற்கு எவ்வித உதவியும் செய்வதாகக் காணே - உபதேசம் செய்கிருர்கள், உற்பத்தியைப் பெருக்குங்கள் என்று.

இப்படி உபதேசம் செய்வது மட்டுமல்ல, கூடவே எதிர்க்கட்சியாரின் பேச்சுகளுக்குச் செவிசாய்க்காதீர்கள்

(தொடர்ச்சி 8ம் பக்கம் பார்க்க)

கொரியாப் போர் உலகப் போராக மாறினல்...?

கண்ணை மூடிக்கொண்டு அமெரிக்காவைப் பின்பற்றுமாம் பிரிட்டன்!

ஐ. நா. வை மீறவும் தயாராம்!

லண்டன், ஜூன் 27—கொரியாப் போரில் ஐ. நா. வை மீறியும் அமெரிக்கா நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கும் பட்சத்தில்......(இம்மாதிரி ஏற்படலாம் என்று, வாஷிங்டன் செய்திகள் சூசகமாக தெரிவிக்கின்றன) பிரிட்டன் தனது முழு ஆதரவை அமெரிக்காவுக்கு அளிக்கும் என்று தெரியவருவதாக, 'குளோப்' ராஜதந்திரிருபர், கூறுகிருர்.

ஆனல் பிரிட்டனில் இப்போதைய கொள்கை ஐ. நா. வுக்குட்பட்டே அமெரிக்காவை பூரணமாக ஆதரிப்பது தான் என்றும், அவர் தெரிவிக்கிருர்.

தென் கொரியாவுக்கு வெடி விமானங்கள், வெடி மருந்துகளும் அனுப்ப, அமெரிக்கா விரும்புவதை பிரிட்டன் ஆதரிக்கிறது என்றும் அவர் சொல்கிருர்.

அவர் மேலும் கூறுவதாவது:—பிரிட்டிஷ் உதவி, கொரியாவுக்கு நேரிடையாக அளிக்கவேண்டிய அவசியமிராது என்று. அவல்லாதடிலாக கருதுகிறது. அமெரிக்கா, தென் கொரிய குடியரசுக்கு நிதி உதவியை வருடத்திற்கு 1,00,00,000 பவுன் வீதம் அளித்து வருகிறது. தென் கொரிய ராணுவத்திற்கும், ஏற்கனவேயே ஆயுத சப்ளையும் அமெரிக்கா செய்து வந்திருக்கிறது. தென் கொரியா, வட கொரியா சர்க்கார்களுடன் ரஷ்யாவும், அமெரிக்காவும் எவ்வித ராணுவ உடன்படிக்கையும் செய்துகொள்ளாதிருக்கையில் யுத்தத்தில் அமெரிக்காவும், ரஷ்யாவும் ஈடுபடவேண்டிய அவசியத்திற்கே இடமில்லை.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், கொரியாவில் மத்யஸ்தம் செய்துவைக்கத் தயார் என்று அறிவித்திருக்கிறது.

ஐ. நா-வில் பெண்களுக்குப் போதிய பிரதிநிதித்துவம் இல்லை

பெண்கள் நிலைபற்றி ஐ. நா. கமிஷன் ரிப்போர்ட்

நியூயார்க், ஜூன் 27—ஐ. நா-வில் பெண்களுக்குப் போதிய பிரதிநிதித்துவம் இல்லை. இந்த உலக ஸ்தாபனத்தின் 96 உயர்ந்த பதவிகளில் ஒரு பதவியைத்தான் ஒரு பெண் வகித்துவருகிருர். 588 ஐ. நா 'டெலிகேட்' மெம்பர்களில் 100-க்கு 4 பேர்கள் தான் பெண்கள்.

இவ் விவரங்கள் பெண்கள் அந்தஸ்து பற்றி, ஐ. நா கமிஷன் வெளியிட்டுள்ள ரிப்போர்ட்டிலிருந்து தெரியவருகிறது.

பாதுகாப்புக் கௌன்சில், அணுசக்தி கமிஷன், தகராறு தீர்த்துவைக்கும் கமிஷன், பொருளாதார சமூகக் கௌன்சில் தர்மகர்த்தா கௌன்சில் இவை எதிலும் பெண்கள் பிரதிநிதித்துவம் பெறவில்லை என்று, இந்த கமிஷன் அறிக்கையை வெளியிட்டுள்ள ஐ. நா. காரியதரிசி தோழர் டிரிகெவ்லே கூறுகிருர்.

லேக்ஸக்ஸஸ் ஜினிவா ஆகிய இடங்களிலுள்ள ஐ. நா. செக்ரிடேரியட்டில் வேலை செய்யும் 3916 பேர்களில் 1737 பேர்கள் பெண்கள் என்றும், அதிகச் சம்பளம் உள்ள பதவிகளில் 3 பெண்கள் மட்டும் இருப்பதாகவும் தெரியவருகிறது.

பெண்களுக்கு அதிக சந்தர்ப்பம், அதிக வசதிகள் அளிக்கப்படவேண்டும் என்று 15 மெம்பர் நாடுகள் கோரியதினுலேயே ஒரு கமிஷன் ஏற்படுத்தி இந்த ரிப்போர்ட் தயாரிக்கப்பட்டது.

சமூக விவகார டைரக்டராக ஸ்விடனைச் சேர்ந்த தோழியர் ஆல்வாமிர்டல் இருந்துவருகிருர். ஐ. நா. செக்ரிடேரியட்டில் இவர்தான் மிக உயர்ந்த பதவியை வகிக்கும் பெண்.

சுட்டுத்தள்ளும் உத்தரவு தளர்த்தப்படுகிறது

லண்டன், ஜூன் 27—'மும்முறை கேட்டும் பதில் சொல்லாமல் இருக்கும் சந்தேகிக்கப்பட்டவர்களைச் சுட்டுத் தள்ளு' என்று பிரிட்டிஷ் காவலாளிகளுக்கு விடப்பட்ட உத்தரவு ரத்தாகும் எனத் தெரிகிறது.

குடித்துவிட்டிருந்த ஜெர்மன் போலீஸ்காரர் ஒருவரை சுட்டுக்கொன்றதற்காக, பிரிட்டிஷ் காவலாளி கார்டர் விர்ஸெல் என்பவருக்குத் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டது. உத்திரவுப்படியே இவர் நடந்ததற்காக மன்னிப்பு அளிக்கப்பட்டு, இவர் விடுதலை செய்யப்பட்டிருக்கிருர். இவர் உத்திரவு ரத்து பற்றியும், காவலாளிகளுக்கான புது உத்திரவு பற்றியும் பிரிட்டிஷ் யுத்த மந்திரி கேஜூர்ஸ்டிரச்சி, பார்லிமெண்டில் ஒரு அறிக்கை வெளியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சென்னைக்கு 3322 டன் பர்மா அரிசி

சென்னை, ஜூன் 27—பர்மாவிலிருந்து 3322 டன் அரிசி ஏற்றிவரும் கப்பல் இன்னும் ஒரு வாரத்தில் சென்னை துறைமுகத்திற்கு வந்து சேரவிருக்கிறது இந்த அரிசிமுழுவதும் சென்னை மாகாணத்திற்கே ஒதுக்கப்பட்டிருக்கிறது.

மாலை மணி
சென்னை 28—6—50 புதன்கிழமை

தென் கொரியா தலைநகரை அணுகி : : விட்டன வடகொரியாப் படைகள்

எல்லையில் தென்கொரியாப் படைகள் முன்னேற்றம்

ரஷியக் கப்பல் ஒன்று மூழ்கடிக்கப்பட்டது

டோகியோ ஜூன் 26—போர் மூண்டு இரண்டு நாட்களுக்குள் தென் கொரியாவைப் பல மாகத் தாக்கி முன்னேறியது வடகொரியப் படைகள்.

வடகொரிய தலைநகரான பியோங்யங் 12 மைல் தூரத்தி லுள்ள பூசோன்போ என்னும் கடலோரத் துறைமுகத்தை 7 மைல் தொலை வினுள் இம்மிபோல் அடைத்துவிட்டன. தென்கொரியாவின் முக்கிய விமான நிலையமான கிம்போ விமானநிலையத்தை வடகொரியப் படைகள் கைப்பற்றிவிட்டன.

வடகொரியாவின் படை யெடுப்பு மிகப் பிரமாதமான முறையில் நடைபெற்று வருகிறது. இதுவரை வடகொரியப் படைகள் தென்கொரியாவின் 70 சதவிகிதப் பகுதியை அபகரித்துக் கொண்டுள்ளன. தென்கொரியாவின் 38-வது அட்சரேகைக்குத் தெற்கே 30 மைல் தூரத்தில் வடகொரியப் படைகள் இருக்கின்றன.

வடகொரியா, தென்கொரியாவை 70,000 துருப்புகளை யும், 70 டாங்கிகளையும் கொண்டு தாக்குவதாகவும் செல்லப்படுகிறது. தென் கொரியப் படைகளும், வட கொரியப் படைகளும் பலமாக மோதிக்கொள்ளும் போராட்டம் நடைபெறுகிறது.

ரஷ்யப்படம் மூழ்கடிக்கப்பட்டது

வேதுரிய பூவாலுக்குக் வடமேற்கே தீவுகளில் 600 டன் எடையுள்ள ரஷ்யப் பெரிய ஒரு கப்பலொன்றை அமெரிக்க விமானம் ஒன்று தாக்கி மூழ்கடித்துவிட்டதாக வும், இதனால் தென்கொரியப் படைகள் முழுமூச்சுடன் முன்னேறி வருவதாகவும் தென்கொரிய அமைச்சர் ஒருவர் கூறினார்.

தென்கொரியாவின் தலைநகரான சியோல் நகரத்தை நோக்கி வடகொரியப் படைகள் முன்னேறி வருவதாகவும், சியோல் நகரம் தாக்குதலுக்கு உள்ளாகும் என்றும் தென்கொரிய அமைச்சர் ஒருவர் கூறினார்.

சியோல் நகரத்தை நோக்கி வடகொரியப் படைகள் முன்னேறி வருவதாகவும், சியோல் நகரம் தாக்குதலுக்கு உள்ளாகும் என்றும் தென்கொரிய அமைச்சர் ஒருவர் கூறினார்.

சியோல் மக்களுக்கு தென் கிழக்காக ஓடுகிறது.

வடகொரியாவின் கற்காட்சி டாஸ் ஏஜென்சியும் வட கொரியப் படையெடுப்புக்கு முதன் முதலாகக் கிடைத்த செய்தியொன்றை இன்று தெரி வித்துள்ளது. அதாவது தென் கொரியாவின்மீது வடகொரியப் படைகள், எதிர்பார்த்தபடி மர 38-வது எல்லையைத் தாக்கியதன் விளைவாகவே இப் போர் மூண்டதாக என்று கூறுகிறது.

ஆஜர்பைஜானில் கர்பூவிரம்

டோனன், ஜூன் 27

ஆஜர்பைஜானின் புதிய மந்திரி சபையில் பெண்களுக்கு சமமான உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. இதுவரை இல்லாத அளவுக்கு ஒரு பெண்ணுக்கு மந்திரி பதவி அளிக்கப்பட்டுள்ளது.

ஆஜர்பைஜான் சோவியத் ரஷ்யாவின் தென்மேற்கு எல்லையில் உள்ளது. இதன் தலைநகரம் பாகு. இங்கு பெரும்பாலும் முஸ்லிம்கள் வசிக்கின்றனர்.

மேற்கு ஜெர்மனியில் அடக்குமுறை

டல்ஸ்டாஸ், ஜூன், 27—மேற்கு ஜெர்மனியில் கட்டாய ராணுவச் சேவை முறை அமுலுக்கு வந்துள்ளது. இதன் மூலம் மேற்கு ஜெர்மனியர்கள் ராணுவத்தில் கட்டாயமாக சேவை செய்ய வேண்டியிருக்கும்.

இதனால் ஏராளமானோர் ராணுவத்தில் சேர்ந்து வருகின்றனர். இதனால் ஏராளமான இளைஞர்கள் வேலை யில்லாமல் திண்டாடுகின்றனர்.

இதனால் ஏராளமான இளைஞர்கள் அமெரிக்கா, கனடா, தென்னாப்பிரிக்கா போன்ற நாடுகளுக்கு குடியேறி வருகின்றனர்.

யுனைடெட்ஸ்டேட்ஸ் ஜெட் விமானங்களை தயாரிக்கிறது

சிலூர்ச், ஜூன் 27—இரண்டு பிரிட்டிஷ் ஜெட் விமானங்களை தயாரிக்கும் முயற்சியில் பிரிட்டிஷ் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. இந்தியா அதே சமயம் பொருளாதார நெருக்கடியில் சிக்கி தவிக்கிறது.

இந்த விமானங்களை தயாரிப்பதற்கு ஆகும் செலவு 550 லட்சம் பவுண்டுகள். இவ்விமானங்களைப் போட்டோ மூலம் எடுப்பதற்கு மட்டும் ஒரு லட்சம் பவுண்டுகள் செலவாகுமாம்.

இவ்விமானங்களை தயாரிப்பதற்கு ஆகும் செலவு பற்றி பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் கடும் விவாதம் நடைபெற்றது.

இவ்விமானங்களை தயாரிப்பதற்கு ஆகும் செலவு பற்றி பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் கடும் விவாதம் நடைபெற்றது.

"நாங்கள் இன்னும் இருக்கிறோம்"

பிரிட்டிஷ் அட்மிரல் ஜெனரல் பிரிட்டிஷ்காரர்களுக்கு

வண்டன், ஜூன் 27—பிரிட்டிஷ் அட்மிரல் ஜெனரல் ஸர்டக்ளஸ் ப்ரேஸர் இன்று பிரிட்டிஷ் மக்களுக்கு ஒரு செய்தி அனுப்பியுள்ளார்.

அதில் அவர் கூறியிருப்பதாவது:

"பிரிட்டிஷ் மக்களே! நாங்கள் இன்னும் இருக்கிறோம். நாங்கள் இன்னும் இருக்கிறோம் என்பதை எண்ணி மகிழ்ச்சி அடையுங்கள்.

வரலாற்றில் இல்லாத அளவுக்கு ஒரு பெரிய போரை நாம் சந்தித்து வருகிறோம். இந்தப் போரில் நாம் வெற்றி பெறுவோம் என்பதை நான் உறுதியாக நம்புகிறேன்.

இந்தப் போரில் நாம் வெற்றி பெறுவதற்கு ஆகும் செலவு பற்றி நீங்கள் கவலைப்படக் கூடாது. இந்தப் போரில் நாம் வெற்றி பெறுவதற்கு ஆகும் செலவு பற்றி நீங்கள் கவலைப்படக் கூடாது.

இந்தப் போரில் நாம் வெற்றி பெறுவதற்கு ஆகும் செலவு பற்றி நீங்கள் கவலைப்படக் கூடாது.

காம்தலை எலிப்பண்ணைக்கு ரிக்கார்டு

வண்டன், ஜூன் 27—எலிப்பந்தயம் என்பது முறைவைத்து எலிகளுக்கு பண்டம் பந்தயம் வைத்து நடத்தப்படுவதாகும். இதில் எலிகளைத் தேர்ந்தெடுத்து ஓடவிடுவார்கள்.

நீச்சல் போட்டி

வண்டன், ஜூன் 27—ஒலிம்பிக் நீச்சல் போட்டியானது வரும்பொழுது சர்ச்சு வருவதற்கு முன்பாக ஆங்கில கால்வாயை நீந்திக் கடக்கும் போட்டி நடைபெறுவது வழக்கம். இந்த ஆண்டு நடைபெறுவதற்கு முன்பாக ஆங்கில கால்வாயை நீந்திக் கடக்கும் போட்டி நடைபெறுவது வழக்கம்.

இரட்டை தண்டனை வேண்டாம்

பெண் வைரியின் கோர்க்கை

சிலூர்ச், ஜூன் 25—தம் புருஷனாலும், ஒன்பதுமாத குழந்தையாலும் கைவிடப்பட்டு நான்கு தண்டனை மீண்டும் ஜெயிலை குன்ற அறையில் அடைக்கப்பட்டிருக்கும் ஒரு பெண் வைரி, தனக்கு இரட்டை தண்டனை வேண்டாம் என்று கோரிக்கை விடுத்துள்ளார்.

இவர் செய்த குற்றமாவது ஒரு வாடகைக் காரோட்டியை கொலை செய்ததாகும். இவர் செய்த குற்றமாவது ஒரு வாடகைக் காரோட்டியை கொலை செய்ததாகும். இவர் செய்த குற்றமாவது ஒரு வாடகைக் காரோட்டியை கொலை செய்ததாகும்.

தி. மு. கழகச் சொற்பொழிவு

2 - 7 - 50

குன்னூர் (மேநீ) :—திரு. சொர்ணலிங்கம்

யுனைடெட் ஸ்டேட்ஸ் ஜெட் விமானங்களை தயாரிக்கிறது

சிலூர்ச், ஜூன் 27—இரண்டு பிரிட்டிஷ் ஜெட் விமானங்களை தயாரிக்கும் முயற்சியில் பிரிட்டிஷ் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. இந்தியா அதே சமயம் பொருளாதார நெருக்கடியில் சிக்கி தவிக்கிறது.

இந்த விமானங்களை தயாரிப்பதற்கு ஆகும் செலவு 550 லட்சம் பவுண்டுகள். இவ்விமானங்களைப் போட்டோ மூலம் எடுப்பதற்கு மட்டும் ஒரு லட்சம் பவுண்டுகள் செலவாகுமாம்.

இவ்விமானங்களை தயாரிப்பதற்கு ஆகும் செலவு பற்றி பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் கடும் விவாதம் நடைபெற்றது.

வரலாற்றிலிருந்தும்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் உபதேசம் செய்கிறார்கள்.

காங்கிரஸ் மேடைகளில் பேசுவதற்கு இப்போது ஒரு காரணமும் இல்லை. காங்கிரஸ்காரர்களின் ஆட்சி வந்த பிறகு பொது மக்கள் மனம் புழுங்கிக் கிடக்கிறது. எனவே, அவர்கள் ஆட்சி பீடத்திலிருந்து அதைச் செய்தோம், இதைச் செய்தோம், என்று அளப்பதற்கும் வழியில்லை. ஆகவே நம்மீது பாய்கின்றனர். இப்படிப்பட்ட நேரத்தில் காங்கிரஸ் மேடையில் ஒருவர் பேசுகிறார் என்றால், அவர் எவ்வளவு மானங்கெட்டவராகவும், 'பேச்சுத் திறமை' படைத்தவராகவும் இருக்க வேண்டும் என்பதை எண்ணும்போது ஆச்சரியமடையாமலிருக்க முடியவில்லை. சிலர் சொல்லுகிறார்கள் தோழர் அண்ணாத்துரையையும், நெடுஞ்செழியனையும், பேச்சுத் திறம்படைத்தவர்கள் என்று. அதைநான் ஒப்புக் கொள்ளமாட்டேன். ஏனென்றால், நமது இயக்கக் கொள்கைகள், பல ஆண்டுகள் பேசினாலும் முடிவு பெறாத அத்தனை விரிவு வாய்ந்தவை. நம் சமுதாயத்தின் சீர்குலைவை பற்றி, ஏறிய மேடை இறங்காமல் 10 ஆண்டுகள் பேசினாலும் தீராது. நமது அரசியல் கொள்கைகளைப்பற்றிப் பேசிக் கொண்டே இருக்கலாம். கேட்கமட்டும் சலிப்படையாமல் இருந்தால் ஒரு 10 ஆண்டுகளுக்கு இதுபோலவே நமது பொருளாதாரத் திட்டமும் 10 ஆண்டுவரை பேசலாம். இவ்வளவு பேச இடத்தை வைத்துக்கொண்டு நம்மவர்கள் பேசுவதில் என்ன ஆச்சரியம் இருக்க முடியும்? டணக்காரன் சுகபோகம் அனுபவிப்பதும், பலசாலி ஒருவன் பாரம் சுமப்பதும், ஆச்சரியப்படத்தக்கதல்ல. அதுபோலவே, பேசுவதற்கு ஏராளமாக இடத்தை வைத்துக்கொண்டிருக்கும் நம்மவர்கள் பேசுவதிலும் ஆச்சரியமில்லை.

பிச்சைக்காரன் ஒருவன் பிளசர் கார் வைத்திருந்தால்—நொய்ந்த உடலுடைய நோயாளி ஒருவன் பாரம்சுமந்தால்—அவை உண்மையில் ஆச்சரியமுண்டாகத்தான் செய்யும். அதுபோலவே மேடையில் பேசுவதற்கு எந்த வழியும் வகையும், காரணமுமில்லாத காங்கிரஸ் தோழர்கள், இன்று மேடையில் ஏறி அஞ்சு நிமிடம் பேசினாலும் அது ஆச்சரியப்படத்தக்க செயலேயாகும். அதைவிட ஆச்சர்யம், அவர்கள், மானவெட்க உணர்ச்சி சிறிதுகூட இல்ல திருப்பதாகும். மக்களிடம் சொன்ன வார்த்தைகளெல்லாம் பொய்யாகி—மக்களின் எண்ணங்களெல்லாம் மண்ணாகி—பணம் புண்ணாகிக்கிடக்கும் இந்த நேரத்தில—மக்கள் முகத்தில் விழிக்கவே வெட்கப்பட வேண்டிய இந்த நேரத்தில், காங்கிரஸ்காரர்கள் மேடையேறுகிறார்கள் என்றால், அது செயல் நம்மால் நினைத்துக்கூடப் பார்க்கமுடியாத அருஞ்செயலாகும். இந்த அருஞ்செயல்களெல்லாம் நமது அண்ணாத்துரைக்கோ, நெடுஞ்செழியனுக்கோ வரவே வராது—வரவேண்டிய அவசியமுமில்லை—வரவும் வேண்டாம். இந்த அருஞ்செயல்களெல்லாம் அலாதிப் பிரிவுகளான காங்கிரஸ்தோழர்களுக்கே உரித்தானவை இவைகள் எப்படியாவது இருக்கட்டும். இவர்களுடைய அரசியல் கோட்பாடுகளைப் பெருமையாக நம்பிக்கிடந்தமக்கள், ஏமாற்றத்தைக் கைமாறாகப் பெற்ற காரணத்தால், இப்போது அரசியல்வாதிகள்—அரசியல் என்றாலே அவற்றை வயிற்றுப் பிழைப்புக்காரர்களின் வயிற்றுப்பிழைப்பு, என்று கருதுகிறார்கள் வெறுக்கிறார்கள். அந்த வெறுப்பின் காரணமாக, எந்த அரசியல் வாதிக்கும் ஆதரவளிக்கத் தயங்குகிறார்கள். இந்தத்தயக்கத்தையே 'அரசியற் சோர்வு' என்கிறேன் நான். இச் சோர்வு நீங்கவேண்டும்—நீங்கப்பட்டாக வேண்டும். நீங்கவில்லையானால் அறியாமையிருந்த காலத்தில் ஆதிக்கத்தைக் கைப்பற்றியவர்கள் தாம் கைப்பற்றிய ஆதிக்கத்தைச் சாசுவதமாகப் பரம்பரையாக தமக்கு ஏற்படுபாக உரிமையாக்கிவிடுவார்கள். அந்த ஆக்கத்திற்கு இந்த அரசியற் சோர்வு துணையாகவும் அமைந்துவிடும். எனவே தான், ஆதிக்கக்காரரின் அனுபவத்தைத் தகர்ப்பதற்கு, மீண்டும் மக்களுக்கு அரசியல்எழுச்சியை ஏற்படுத்துவதுடன், கூடவே, அரசியல் அறிவையும் ஏற்படுத்தவேண்டும் என்கிறேன் நான்.

சரித்திரம் கண்ட நாள் தொட்டே நம் நாடு முடியாட்சியிலேயே இருந்தது. ஆதலால் மக்கள் குடியாட்சி என்பதே புதிய அனுபவமாக இருக்கிறது. அதைப்பற்றிய ஞானமே நமக்கு இனிமேல்தான் ஏற்பட வேண்டியிருக்கிறது. நாம் பூரண விழிப்படையுமுன்னமே, நம்மை வீழ்த்திச் சிதறடித்துவிட வேண்டுமென்று வடஇந்திய ஆதிக்கவெறியர்கள் துடித்துக்கொண்டிருக்கிறார்கள். அரசியலில் ஒருவட இந்திய ஏகாதிபத்தியத்தைச் சிருஷ்டிப்பதற்கான திட்டங்களை விரைந்து நிறைவேற்றி வருகின்றார்கள். சரித்திரத்திலேயே நம்மை அகற்றிவிட வேண்டுமென்று முயற்சிக்கிறார்கள். இத்தகைய முயற்சி, இன்றல்ல, நேற்றல்ல பன்னூறு ஆண்டுகளுக்கு முன்னமே தோன்றி ஓரளவு அவர்களுக்கு வெற்றியும் தந்திருக்கிறது.

உதாரணமாக ஒன்று சொல்கிறேன் திராவிட நாடு மூன்று பக்கமும் கடலால் சூழப்பட்டிருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும் கிழக்கடற்கரை ஏறத்தாழ 1500 மைல் நீளம் நம நாட்டின் எல்லையில் இருக்கிறது. இத்தனை நீளமுள்ள கடலுக்குச் சரித்திரத்தில் என்ன பெயர் தெரியுமா? வங்காளக் கடல் என்பதாகும். மேற்குக் கடல் ஏறத்தாழ 1000 மைல் நீளம் நம் நாட்டின் எல்லையில் இருக்கிறது. அதற்குப் பெயர் என்ன தெரியுமா? அரபிக் கடல் என்பதாகும். தெற்கேயுள்ள குமரிக்கடல் நமக்கே முழுப்பாத்தியமுள்ளதுதான், ஆனால், பெயர்மட்டும் நம்முடையதல்ல. இந்துமாக் கடல் என்பது அதன் பெயர். இப்படியாக திராவிடன்-தமிழன், தான் வாழுமிடத்திலேயே தன் பெயரில்லாமல் செய்யப்பட்டிருக்கிறான்.

இவைகளெல்லாம் முன்பு நடந்தவை. இப்போது நடப்பது என்ன? திராவிடம்—தமிழ் என்னும் பெயர்களையே எங்கும் வரலாற்றில் இடம் பெறாமல் செய்ய முயல்கிறார்கள். உதாரணம் ஏராளமாகச் சொல்லலாம். என்றாலும் ஒன்று மட்டும் சொல்கிறேன்.

இந்தியா என்பது ஒரே நாடு என்றும், ஒரே கலாச்சாரம் என்றும் ஒரே தேசியம் என்றும் பிதற்றிக் கொண்டிருந்த நிலைமை மறைந்துவிட்டது. பாகிஸ்தான் பிரிந்ததாலும், இந்திய யூனியன் என்கிற பெயரில் மத்திய சர்க்கார் அமைந்திருப்பதாலும், வங்க ராஜ்யம், உத்தரப்பிரதேச ராஜ்யம், என்கிற பல ராஜ்யங்கள் இருப்பதாக ஒப்புக் கொண்டிருப்பதாலும் இந்தியா ஒரு நாடல்ல; அது ஒரு கண்டம் என்பது நிரூபிக்கப்பட்டுவிட்டது இது நமக்கோர் வெற்றியேயாகும். ஏனென்றால், மத்திய சர்க்கார் பெயரளவுக்காவது 'இந்திய யூனியன்' என்று சொல்லிக்கொண்டிருப்பது, இந்தியா ஒரே நாடல்ல என்பதை மெய்ப்பிக்கக்கூடியதாக இருப்பதால், தனியாட்சிக் கோரிக்கையுடைய நமக்கு ஓரளவு வெற்றி என்று குறிப்பிட்டேன். ஆனால் மத்திய சர்க்காருக்குப் பெயர் சூட்டிய மகானுபாவர்கள் உள்ளத்தில் நேர்மையில்லாமல் இருக்கிறார்கள் என்பதையும் நாம் உணரவேண்டும். எப்படியெனில் அவர்கள் நேர்மை நெஞ்சினராக இருந்தால் இந்திய யூனியன் என்று மத்திய சர்க்காருக்குப் பெயர் சூட்டிய உடனே அதில் அங்கம் பெற்றுள்ள ஒவ்வொரு ராஜ்யத்தினரும், அதனதன் தேசியப் பெயரையே சூட்டியிருக்கவேண்டும். அப்படிச் செய்யவில்லை. இனிமேல் செய்வார்கள் என்றும் சொல்லமுடியாது. நம்நாட்டின் தேசியப்பெயர் 'திராவிடநாடு' என்பதாகும். மத்திய ஆட்சியை வகுத்தவர்கள் நேர்மையாளராக இருந்தால், சென்னை ராஜ்யம், சென்னை மாகாணம் என்று குழப்பமாக இருவேறு பெயரில் அழைத்துவரும் பித்தலாட்டத்தை விட்டுவிட்டு, திராவிடநாடு என்று பெயர் சூட்டி அழைக்க வேண்டும். நாடு என்ற தமிழ்ச் சொல்லை உடயோசிக்க வெட்கமாக இருக்கிறதென்றால் திராவிட ராஜ்யம் என்றாவது அழைத்துத் தொலைக்கலாம். ஆனால் இந்தப் பித்தலாட்டக்காரர்கள் இந்தத் தேசியப் பெயரை ஒப்புக்கொள்ள மாட்டார்கள். உண்மையான 'தேசிய' உணர்ச்சியைத் தமிழர்கள்—திராவிடர்கள் பெறக்கூடாதென்பதே இந்தி ஏகாதிபத்திய வெறியர்களின் உள்ளெண்ணம். திராவிடம் என்பதை ஒப்புக்கொண்டால், அதன் வழியிலேயே திராவிட இயக்க கொள்கைகள் பரவிவிடுமோ என்றும் அஞ்சுகிறார்கள் அந்த அச்சத்தின காரணமாகவே, இவர்கள் இத்தனை பெரிய பித்தலாட்டத்தைத் துணிந்து செய்கிறார்கள். இதிலிருந்து தமிழன்—திராவிடன் என்கிற பெயர்களே அவன் வாழும் நாடு—அவனுடைய ஆளப்படும் ஆட்சி, என்றெல்லாம் சொல்லப்படுகிற இடங்களில், இடம் பெறாமல்போய் விடுகிறது. இவ்வாறு திராவிடன் வரலாற்றிலிருந்தும் அகற்றப்படுகிறான்.'' ஆனால், தான் தாழ்வடைந்து வருவதைமட்டும் இன்னும் உணரவில்லை. உணர்ந்திருந்தால், தான் வாழும் நாட்டில், தான் பேசும் மொழிக்கே இடமில்லை என்று அரசாங்கம் உத்தரவு செய்வதைப் பார்த்துக்கொண்டிருப்பானா? தமிழன் இந்தியைக் 'கட்டாயமாகப் படிக்க வேண்டும்—இங்கிலீஷ் படிக்க வேண்டும் தமிழைப் படித்தாலும் படிக்கலாம்—படிக்காவிட்டாலும் கவலையில்லை என்ற தோரணையில் அரசாங்கம் செய்த உத்தரவை சகித்துக்கொண்டிருப்பானா? தேசிய உணர்ச்சியிருந்தால்'' என்று இந்தி நுழைவைப் பற்றி வன்மையாக எதிர்த்துப்பேசியதுடன் நெசவாளர்களின் கஷ்டங்களையும் விரிவாகப் பேசி பாராட்ட ஆரம்பித்து வைத்தார்.

தி. மு. க. தலைமை நிலைய கட்டிட நிதி

	ரூ அ. பை.
முன்வரவு	3109—14—6
சி. பாக்கியம், மதுரை	2—0—0
தி. மு. க. நாட்டுச்சாலை கிளை	10—0—0
சாத்தூர் தி. மு. க. கிளையின் மூலம்	4—0—0
எம். எஸ். எம், இரயில்வே தலைமை நிலைய அனுதாபிகள்-தோழர் தனபால் மூலம்	20—0—0
ஏ எஸ். குப்புசாமி, வேலூர்	5—0—0
தி. மு. மாணவர் கழகம்-தேனி	15—0—0
"தப்பி ஸ்டோர்ஸ்", ஆலந்தூர், சென்னை	1—0—0
பி. சாமித்துரை, கனூர்	1—8—0
	3168—6—6

கொரியப்போரில் ரஷ்யா தீவிரம் காட்டுகிறதாம்

விஷின்ஸ்கியும் கொரியாவில் இருக்கலாமென சந்தேகம்

லண்டன், ஜூன் 27—

சென்றமாதம் 20 தேதிக்குப்பின், எவ்விதத் தகவலும் இல்லாமலிருந்த ரஷ்ய அயல்நாட்டு மந்திரி தோழர் விஷின்ஸ்கி தென்கிழக்கு திசையில் எங்கேயோ சென்றிருப்பதாக நம்பப்படுகிறது என்று, இங்கு செய்தி கிடைத்திருக்கிறது.

மற்றொரு பெரிய புள்ளியும் தூரக் கிழக்கில் ரஷ்ய கமாண்டருமான மார்ஷல்மோலினொவ்ஸ்கியும் மஞ்சூரியாவிலுள்ள தன் தலைமைக் காரியாலயத்திலிருந்துகொரியாநிலைமையைக் கவனித்து வருவதாகவும் மற்றொரு செய்தி கூறுகிறது.

துணிவுப் பயிற்சிக்கு பள்ளிக்கூடம்

லண்டன், ஜூன். 27—

முரட்டுத்தனமான காரியங்களை செய்ய பயிற்சி அளிக்கும் பள்ளிக்கூடம் ஒன்று எஸ்டேல் என்ற இடத்தில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இதில் சேர்ந்து படிப்பவர்களுக்கு மலைமேலேறுவது, படகோட்டுவது, காட்டில் புகுந்து அசாத்தியமான காரியங்களைச் செய்வது ஆபத்தில் சிக்கியவர்களைக் காப்பாற்றுவது முதலியவை கற்றுக் கொடுக்கப்படுமாம். —ருலேசர்

ஐரோப்பாவில் மரணவிகிதம் குறைவு

ஜெனிவா, ஜூன் 25—

சென்ற 50 ஆண்டுகளில் ஐரோப்பிய நாடுகளில் மரண விகிதம் குறைந்திருக்கிறது. ஆண்களைவிட பெண்களே அதிககாலம் வாழ்ந்திருக்கிறார்கள். ஐக்கிய நாடுகளின் உலக சுகாதார ஸ்தாபனம் வெளியிட்டிருக்கும் புள்ளி விவரங்களிலிருந்து இது தெரிய வருகிறது.

இங்கிலாந்திலும்; வேல்ஸிலும் 1900-வருஷத்தில் ஆயிரம் பேருக்கு 17 பேர் வீதம் மரணமடைந்தனர் இப்போது இது ஆயிரத்துக்கு 12 3 என்ற விகிதத்துக்கு குறைந்திருக்கிறது.

இத்தாலியில் மரண விகிதம் ஏறக்குறைய பாதியாகிவிட்டது.

ஹாலந்தின் மரண விகிதம் இன்னும் குறைந்துவிட்டது. 1900-ம் வருஷத்தில் அங்கு ஆயிரத்துக்கு 17 6 பேர் மடிந்தார்கள் இப்போது மரணவிகிதம் ஆயிரத்துக்கு 8 3 ஆகக் குறைந்திருக்கிறது.

ஜூன் 29

தோழர் அண்ணாத்துரை அவர்களின் 'இலட்சிய வரலாறு' சொற்பொழிவு 29-6-50 அன்று நடைபெறும்.

நாட்டு நடப்பு

சொற்பயிற்சிக் கழகம்

குளூர், ஜூன். 24—

18—6—50 மாலை எஸ். என். அருணாசலம் தலைமையில் 'நம் நாட்டுக்கேற்ற அரசியலமைப்பு' என்ற தலைப்பில், தென்னாடு தனித்து மொழிவழி நாடு அமைந்து ஐக்கிய குடியரசாக இருக்க வேண்டுமென்று பேசினர்.

தோழர் எஸ். கே. கருப்பணன், எஸ். எ. ஆறுப்புசாமி ஆகியோர் பேசினர். நன்றிகூற சொற்பயிற்சி முடிவுற்றது.

சீர்திருத்த கிராம சங்கம்

வராகபுரம், ஜூன். 20—

சங்கத்தின் சார்பாக 11—6—50 ஞாயிற்றுக்கிழமை காலை, சங்கத்தின் இலவச இரவு பாடசாலை மாண, மாணவிகளால் தெருக்கள் சுத்த செய்யும் பிரசார ஊர்வலம் நடைபெற்றது. அதுபோது தோழர் சேரிகளும், சுகாதார இலாகா அதிகாரியும் வந்திருந்து மேற்படி ஊர்வலத்தில் கலந்துகொண்டனர். தோழர் பி. வி. செவின் அவர்கள் சுகாதார வசதிகளில்லாத குடிசைகளையெல்லாம் பார்வையிட்டு, அவைகளுக்கெல்லாம் சுகாதார வசதிகள் கார்ப்பரேஷன் அதிகாரிகளால் ஏற்படுத்தினால் தான் அப்பேட்டையிலிருக்கும் குடிகள், சுகத்துடனும் நோயில்லாமலும் வாழமுடியும் என்று கூறினார்.

இளங்கோ நடிகர் மன்றம்

மதுரை, ஜூன். 19—

19—6—50 அன்று இச்சங்க இளங்கோ நடிகர்மன்றக்கூட்டம், தோழர் இரா. சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது. அதுபோது புது ஆண்டிற்குக் கீழ்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. தலைவர் பி. கோவிந்தராஜுலு; துணைத்தலைவர்கள் சங்கிலிராஜ், எஸ். கிருஷ்ணன், செயலாளர்; எஸ். நாராயணசாமி, துணைச் செயலாளர் கே. சிரஸலு, பொருளாளர்: எஸ். அருணமலை, அமைப்பாளர்: இரா. ஆதிசாமி, செயற்குழுவினர்: செ. பூபாலகிருஷ்ணன், கே. ராமன், வி. குருசாமி.

பிரிவுபசாரக் கூட்டம்

திருச்சி, ஜூன் 27—

16—6—50 மாலை, திருச்சி ரயில்வே ஆஸ்பத்திரியில், 32 வருட சர்வீஸிலிருந்து விலகும் தோழர் ஐ மெய்கால் அவர்களுக்கு, ஆஸ்பத்திரி ஸ்வீபர் தோழர்களால் ஓர் பிரிவுபசார கூட்டம் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன.

அக் கூட்டத்தில் ரயில்வே அஸிஸ்டெண்ட் சர்ஜன் தோழர் என். கோவிந்தராஜுலு அவர்களும், தோழர் எ. எஸ். வேணுகோபால் எம். எம். பி. அவர்களும் கலந்துகொண்டார்கள். அதுபோது திருச்சி தி. மு. க. காலனி கிளையின் சார்பில் தோழர் ஜி. தங்கதுரை அவர்களால் அவர் தம் சேவையைப் பாராட்டி பிரிவுபசார இதழ் ஒன்று வாசித்தளிக்கப்பட்டது.

முடிவில், தோழர் ஐ. மெய்கால் நன்றி கூறலுடன்—எல்லோருக்கும் புகைப் படம் எடுக்கப்பட்டது.

மீன்மார்க்கெட்டு பகிஷ்காரிப்பு

திருப்பாபுலியூர், ஜூன் 27—

19-6-50 மாலை திருப்பாபுலியூர் ஏகாம்பரகுளம், பாவநாசஜ் தெருவில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் எஸ். மன்னன் தலைமைவகித்தார். தோழர்கள் கே குப்புராஜ், வி. சண்முகனுர், பி. வி. திருவேங்கடம், சி. மக்கிரி சாமி, டி. ராமநாதன், என். கே வேலாயுதம் முதலியவர்கள் திருப்பாபுலியூர் மீன்மார்க்கெட்டு பகிஷ்கரிப்பை ஆதரித்தும், கூடலூர் முனிசிபாலிட்டியாரின் மீன்மார்க்கெட்டு சுங்க நிர்வாகிப்பைக் கண்டித்தும் பேசினார்கள். தோழர் பி. கணபதி நன்றிகூற, கூட்டம் இனிது முடிந்தது.

வாலிபர் கழகம்

பொள்ளாச்சி, ஜூன். 19—

இவ்வூர் தி. மு. வாலிபர் கழகத்தின் செயற்குழுக்கூட்டம் 11-6-50 கழகக்கட்டிடத்தில், தோழர் அ. ச. ராஜு தலைமையில் கூடி இம்மாத இறுதியில் ஒரு பொதுக்கூட்டம் நடத்துவதென்றும், நாடகங்களின் வாயிலாக கழகப் பிரசாரம் புரிய வாலிபர் கழகத்தின் உட்பிரிவாக "தமிழ் நாடக மன்றம்" அமைக்கப்பட்டுத்தோழர்கள் கோபால் (தலைவர்) க. சின்னத்துரை அ. ச. ராஜு, ச. கந்தசாமி செ. ச. உசேன், மா. ஜமால் உசேன் ஆகியோரடங்கியகுழுவை நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

புலவர் குமரவேல் அவர்கள் எழுதிய 'தமிழ் வாழ்க', ஆ. ச. ராஜு எழுதிய "இலட்சியவாதி" ஆகிய இரு நாடகங்களுக்கும் பயிற்சியளித்து, கழக ஆண்டு விழாவின் போது பிரசார நாடகமாக நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டு நன்றிகூறலுடன் இனிது கலைந்தது.

ஆவேரி ஊழியர் கழகம்

சென்னை ஜூன் 18—

9-6-50 அன்று தோழர் கே. டி. சீனிவாசன் தலைமையில், சங்க நிர்வாக அங்கத்தினர்களின் கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் கீழ்கண்ட அனுதாபத்தீர்மானங்கள் நிறைவேறின.

பென்னி பீச் இன்ஜினியரிங் தொழிலாளர்கள் அனைவரும் நிர்வாகிகளால் வழக்கத்திற்கு விரோதமாக சம்பளம் 7-ந் தேதியும், பஞ்சப்படி 5-ந் தேதியும் கொடுக்கப்படுவதை ஒவ்வொரு மாதமும் இன்றைய வரையில் இருப்பதற்காக, அவர்கட்கு எங்கள் சங்கம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றது. மேலும் பின்னி நிர்வாகிகளின் பிடிவாதத் தன்மையைக் கண்டிப்பதோடு, சர்க்கார் உடனடியாக தலையிட்டு, ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

விவசாயிகள் சங்கம்

வாணியம்பாடி, ஜூன் 21—

15—6—50 திருப்பத்தூர் தாலுகா விவசாயிகள் சங்கநிர்வாகக் குழுக் கூட்டம், சங்கக் கட்டடத்தில் தோழர் வி. என். தம்பிரான் தலைமையில் கூடி கீழ்கண்ட தீர்மானங்களை ஏகமனதாக நிறைவேற்றியது.

1. இத்தாலுகாவில் உள்ள ஏரிகளில் வழுவடைந்த ஏரிகளை உடனே செப்பனிட வ. ஆ. ஜில்லா கலெக்டரை கேட்டுக் கொள்ளுகிறது.

2 இத்தாலுகாவில் கிராமங்களில் வாழும் ஆதித்திராவிட மக்களுக்கு கோவில்களில் நுழைய அச்சமிருப்பதால், ஆதி திராவிடர் முன்னேற்ற அதிகாரிகள் கிராமங்களிற் சென்று, அவர்களைக் கூட்டிக் கோவில் நுழைவு செய்ய வேண்டப்படுகிறது.

3. இத்தாலுகாவில் உள்ள அம்பலூர், திம்மம்பேட்டை, கிரிசமுத்திரம், இவ்வூர்களில் ஒவ்வொரு உயர்தர பாடசாலையும் வைத்தியசாலையும் உடன் ஏற்படுத்த வ. ஆ. ஜில்லா போர்டாரையும், சர்க்காரையும் வேண்டப்படுகிறது.

4. நாட்டில் உணவு நெருக்கடியால், சர்க்கார் புறம்போக்கு நிலங்களில் பயிரிடவுடன், காலாவதியாக போகிறதும் நிலமற்றவர்கள் பயிரிட உத்திரவு தர சர்க்காரை வேண்டப்படுகிறது.

5. வாணியம்பாடி நகரில் உணவு விடுதிக்காரர்கள் சிலர் ஆதிதிராவிடரையும், நாவிதத் தொழிலாளரையும் உணவு விடுதிகளில் விட மறுப்பதாக தகவல் வந்துள்ளதால், இக்குறையைப் போக்க நகரசபையாரும், சர்க்காரும் முன்னின்று களைய வேண்டுகிறது. தோழர் டி. எ. ஆறுமுகம் நன்றிகூற கூட்டம் இனிது முடிவுற்றது.

படகு மூலம் கடல்கடக்கும் முயற்சி

ஒருகிழவரின் தீரம்

லண்டன், ஜூன் 27—

கேப்டவன் டாம்சன்ட்வுட் என்ற 71 வயது கிழவர் அட்லாண்டிக் கடலை 20 அடி நீளமுள்ள படகில் சென்று கடக்க ஏற்பாடு செய்து தன் பிரயாணத்தையும் ஆரம்பித்திருக்கிறார்.

இவர் தனியாகவேதான் செல்கிறார். கடலை 50 நாளில் கடந்து விடலாம் என்பது இவர் எண்ணம். சுமார் 160 நாள் வரையிலும் அதற்கு இவர் தயாராகவே இருக்கிறார். மிகவும் அத்தியாவசியமான உணவுப் பொருள்களையும் வேண்டிய தண்ணீர் மட்டுமே கொண்டுசெல்கிறார். தான் சிகரெட்பிடிக்கப்போவதில்லை என்றும் அப்படிச் செய்தால் தாகம் அதிகரிக்கலாம் என்றும் அவர் கூறுகிறார்.

தேவன்போர்ட் துறைமுகத்தில் சதிக்கும்பல்

லண்டன், ஜூன் 27—

தேவன்போர்ட் துறைமுகத்தில் வரும் யுத்தக் கப்பல்கள் சதிவேலையினால் சேதமடைவதின் காரணத்தை அறிய இங்கிலீஷ் ராணுவ அதிகாரிகள் முனைந்ததின் பயனாய் ஆயுதங்களுடையது என்ற கருதப்படும் ஒரு சிறிய மறைவிடத்தை கண்டுபிடித்திருக்கின்றனர். யாரேனும் கைது செய்யப்பட்டிருக்க வேண்டும் எனத்தெரிகிறது.

ஆஸ்திரேலியாவில் வெள்ளக் கொடுமை நீடிக்கிறது

சிட்னி, ஜூன். 27—

நியூஸவுத்வேல்ஸில் சம்புயல் மழை நீடிப்பதால் வெள்ளக் கொடுமை நீடிக்கிறது. சிட்னியிலிருந்து குவீன்ஸ்லாந்து எல்லை வரை ஒரே வெள்ளக்காடாக இருக்கின்றன. கிராப்டன் என்ற இடத்தில் வெள்ளத்தில் வீடுகள் அநேகமாக மூழ்கிவிட்டன. வீட்டைவிட்டு தப்பிச்செல்ல வழியில்லாதவர்கள் கூரை மீது ஏறி என்ன செய்வதென்னவென்று தெரியாமல் தவிக்கிறார்கள். கால்நடைகள் ஏராளமானவை எல்லாம் வெள்ளத்தில் அடித்துக்கொண்டு போகப்படுகின்றன. —ரூடேர்

இந்தியாவில் சணல் உற்பத்தி அதிகரிப்பு

லண்டன், ஜூன். 27—

டண்டி சணல் தொழில் இன்னும் நெருக்கடி நிலைமையிலேயே இருந்து வருகிறது இதற்குக் காரணம் போதிய கச்சா சணல் கிடைக்காததுதான். இந்தியாவில் சணல் உற்பத்தி அதிகரித்திருப்பது டண்டியிலுள்ளவர்களுக்கு ஆறுதல் அளித்திருப்பதாக பெனுஷியல் டைம்ஸ் கூறுகிறது.

பசுக்கள் செயற்கை முறையில் சினைப்படுத்தப்பட்டன

சென்னை, ஜூன், 26—

வெடினரிகாலேஜ் ஸெண்டரில் 66 பசுக்கள் செயற்கை முறையில் சினைப்படுத்தப்பட்டிருக்கின்றன.

செயற்கை முறையில் சினைப்படுத்தும் மற்றொரு ஸெண்டர் சென்ற பிப்ரவரியில் வேலூரில் ஏற்படுத்தப்பட்டது. மதுரையிலும் ஊட்டி வெடினரி ஆஸ்பத்திரியிலும் சீக்கிரமே ஏற்படுத்தப்படும். —ரூடேர

நார்வேயில் உரேனியம்

ஆஸ்லோ, ஜூன் 27—

நார்வேயில் லவ்ஜ என்ற இடத்தில் உரேனியம் அகப்படுவதாக தெரியவருகிறது.

தாராபுரம் தொகுதியில்

30—6—50ல் நடைபெறும்

சென்னை சட்டசபை தேர்தலில்

ஜனராஜ்ய கட்சி அபேட்சகர்

திரு. S. ரத்னசாமி கவுண்டருக்கு

பச்சைப் பெட்டியில்

தயவுசெய்து ஓட்போடவும்

(விளம்பரம்)

'திராவிடன்' அச்சக உதவி நிதி நாடகம்

9 7 50 ஞாயிறு மாலை 6-மணிக்கு

சென்னை ஒற்றைவாடை தியேட்டரில்

தோழர் சி. என். அண்ணாத்துரை,

நடிப்புப்புலவர் கே. ஆர். ராமசாமி நடிக்கும்

சந்திரமோகன்

கட்டணம்:—ரூ. 5, 3, 2, 1 (வரி உட்பட)

குறிப்பு:—உதவி நிதி நாடகமாதலால், எவரையும் இலவசமாக அனுமதிக்கப்படமாட்டாது.

அன்பழைப்பாளருக்கு மட்டும் தனி இடம் உண்டு.

தோழர்களும், தாய்மார்களும் பெருவாரியாக வந்திருந்து சிறப்பிக்க வேண்டுகிறோம்

சத்தியவாணிமுத்து, காஞ்சி மணிமொழியார் அமைப்பாளர்கள்.

சென்னையில்கீழ்கண்ட இடங்களில் டிக்கட்டுகள் 29 6-50 முதல் விற்கப்படும்
- கே. எம். கணபிரான், 'கலவாய் வீடு' சோலைப்பபன் தெரு, வணணை.
- சி. வி. ராசன், 'செலக்ட் பிளமென்' செலக்ட் டாக்கீஸ் அருகில் செங்காம் பஜார்.
- 'மாலைமணி' அலுவலகம், மண்ணடி.
- கே. திருவேங்கடம் பிஸ்கட் பாக்டரி, 200 ராசப்பசெட்டித் தெரு, பார்க்டவுன்.
- தோழியர் அலமேலு அப்பாதுரை, 10, அருணாசல ஆச்சாரி தெரு. (பாரகன் டாக்கீஸ் அடுத்த தெரு) சேப்பாக்கம்.
- எ. கே. சாமி, 71, ஸ்டிரான்ஸ் ரோடு, ஓட்டேரி.
- எஸ். பாலசுந்தரம், மாணும்பதி ஸ்டோர்ஸ், வில்லேஜ் ரோட், நுங்கம்பாக்கம்.

நாடகத்தன்று மட்டும் தியேட்டரில் விற்கப்படும்

ஸ்காட்லாந்திற்கு 'ஹோம்ரூல்' வேண்டும்

நியூயார்க், ஜூன் 27—

ஸ்காட்லாந்திற்கு 'ஹோம் ரூல்' (சுயாட்சி) வேண்டும் என்று கோரும் இயக்கத்தினர் அமெரிக்காவில் ஸ்காட்டிஷ் வம்சத்தைச் சேர்ந்தவர்களின் ஆதரவைப் பெறுவதற்காக அனுப்பியுள்ள தூது கோஷ்டி இங்கு வந்து சேர்ந்திருக்கின்றனர்.

இவர்கள் 'குவீன்மேரி' கப்பலில் வந்துசேர்ந்தபொழுது இவர்களுடைய தஸ்தாவேஜுகளை எல்லாம் பரிசோதிப்பது சுங்க அதிகாரிகளுக்கு பெரும் வேலையாகப்போய் விட்டது.

செப்டம்பரில் ஒரு உத்தியோக பூர்வமான கோஷ்டியை அனுப்பினால் அதற்கு ஆதரவு இருக்குமா என்று பார்ப்பதற்காகவே இக்கோஷ்டி இப்போது வந்திருப்பதாக அதன் தலைவர் நிருபர்களிடம் கூறினார். அமெரிக்காவுக்குத் தாங்கள் நிதி திரட்டவரவில்லை என்பதை இவர் தெளிவாக்கியிருக்கிறார்.

கீழ்க்கோடியில் அமெரிக்க தூதுவர்கள்

நியூயார்க், ஜூன் 27—

கீழ்க்கோடி நாடுகளிலுள்ள தன் தூதுவர்கள் சிலருக்கு தற்காப்புக்கு சாதனங்களை வைத்துக்கொள்ளும் படி உத்திரவிட்டிருப்பதாக யுனைட்டெட்ஸ்டேட்ஸ் ராஜாங்க இலாகா அறிவிக்கிறது.

இனி நடப்பவை

கல்லக்குடி டால்மியாபுரம்:—30 6-50 அன்று மாலை, ஐந்து மணியளவில், தோழர் எஸ். அப்பாதுரை அவர்களின் முன்னிலையில், திராவிட முன்னேற்றக் கழகத்திறப்பு விழா நடைபெறும். அதுபோது ஆங்கு முன்னணி தோழர்கள் வருகைதந்து பேச அழைக்கப்பெற்றிருக்கிறார்கள்.

புரட்சிப் பாடல்கள்

இன்றைய சினிமா இசைகளில்

இசைச்செல்வன் 'கோரா' இயற்றியது

விலை 0—1—6

வியாபாரிகட்கு கழிவு 25%.

மாதிரிப் பிரதிக்கு 0-2-3 தபால் தலை அனுப்புக.

அஜீஸ் பதிப்பகம்,

விஜயபுரம், திருவாரூர்.

ஏஜெண்டு தோழர்களுக்கு அறிவிப்பு

'மாலைமணி' ஏஜண்டு தோழர்கள் தாம் அனுப்பவேண்டிய பாக்கித் தொகை பூராவையும் இம்மாத முடிவிற்குள் அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர் அப்படி அனுப்பத் தவறும் தோழர்கட்கு எவ்வித முன்னறிவிப்புமின்றி மேற்கொண்டு பத்திரிகை அனுப்பப்படுவது கண்டிப்பாக நிறுத்தப்படும் என்பதைத் திட்டமாகத் தெரிவிக்கிறோம்.

மானேஜர், "மாலைமணி"

ஆசிரியருக்கு ஜனநாயக தொழிற் சங்க துக்கம்

திருநெல்வேலி, ஜூன் 27—

ஜனநாயக நாடுகளின் தொழிற்சங்க பெடரேஷன் ஆசிய நாடுகளுக்கு 4 பேர் அடங்கிய தூதுகோஷ்டியை அனுப்புகிறது. இக்கோஷ்டியினர் பாரசீகம் அடுத்தமாதம் வந்து சேருகின்றனர். இக்கோஷ்டியினர் இந்தியாவுக்கு விஜயம் செய்வதின் நோக்கம் இந்திய தொழிலாளர்களுக்கு பிரிட்டிஷ் தொழிற்கட்சி சங்கங்களிடமிருந்து பயிற்சியளிப்பதுதான் என்று சங்க தேசிய அதிகாரி அறிவிக்கிறார்.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty St., Madras-1.